## யாழ் ப.நோ.கூ. சங்க கிளையில் அரிசி நிறுவையில் மோசடி

யாழ் ப.நோ.கூ. சங்கத்தின் குட்செட்றோட்டிலுள்ள கிளை இலக்கம் 15 இல் வழங்கப்பட்ட ஐந்து கிலோ அரிசியில் 130 கிராம் குறைவாக நிறுத்துக் கொடுக்கப்பட்டமை நிறுவைகள் அளவைகள் அதிகாரிகளினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு குடாநாட்டிலுள்ள சில கிளைகளில் நிறைகள் குறைவாக வழங்கப்பட்டுள்ளமை கண்டு ...04 ஆம் பக்கம் பார்க்க

## உயிரிழந்தோர் நஷ்டஈட்டுக்கு இரு இடத்தும் விண்ணப்பம்

யாழ் மாவட்டத்தில் வன்செயல்கள் காரணமாக உயிரிழந்தோர், ஊனமுற்றோர் ஆகியோர்களுக்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகளை சிலர் கொழும்பில் பெற்றுக்கொண்டதுடன் யாழ்ப்பாணத்திலும் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சிலிருந்து இறந்தவர்களுக்கான நஷ்ட — 04 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பிலிருந்தே குப்பை வாளி ஆஸ்பத்திரி வரவேண்டுமாம்

யாழ் போதனா வைத்தியசாலை விடுதிகளுக்கு முன்னால் கழிவுகளை போடுவதற்கு வாளிகள் வைக்கப்படாமையால் அங்குதங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகள் கழிவுகளை கண்டவாறு வீசுவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் வைத்தியசாலை சூழல் அசுத்தமாக காணப்படுவதுடன் நோய்கள் பரவுவதற்கென — 04 ஆம் பக்கம் பார்க்க


பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 137 பிரமோதூத பங்குனி 30 ( 13-04-1991 ) சனி


## ஆலயத்தில் பயணிகள் தஞ்சம்

கடந்த திங்கட்கிழமையில் இருந்து குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருந்து அனலைதீவு, நயினாதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு போன்ற தீவுகளுக்கு படகுச் சேவை நடைபெறாத காரணத்தால் இப்பகுதியைச் சேர்ந்த சுமார் ஐந்நூறு பிரயாணிகள் கடந்த திங்கட்கிழமையில் இருந்து புங்குடுதீவு கந்தசாமி கோயிலிலேயே தங்கி இருப்பதாக —04 ஆம் பக்கம் பார்க்க

## வன்னிப்பகுதி பசுப்பாலே வடபகுதிநிவாரணமாகவருகிறது!

வடபகுதியின் வன்னிப்பகுதிகளில் இருந்து பெறப்படும் பசுப்பாலே அம்பேபுசவுக்கு அனுப்பப்பட்டு அங்கு மால்மா பக்கற்றுக்களாக்கப்படுவதாகவும் பின்னர் கொழும்பில் இருந்து இவை எமக்கு நிவாரணமாக அனுப்பி வைக்கப் படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஒரு லீற்றர் பசுப்பால் ஐந்து ரூபாவில் இருந்து 6 ரூபா வரை பாற் சபையினால் கொள்வனவு செய்யப்படுகின்றது. 500 கிராம் கொண்ட பால்மா பக்கற் தயாரிக்க நான்கு லீற்றர் பால் போதுமானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் ஆகக்கூடிய விலையான 24 ரூபாவுக்குப் பாலை — 4 ஆம் பக்கம் பார்க்க

● ஈச்சமோட்டை, கொழும்புத்துறை, அரியாலை, பாஷையூர்

# பலாலியிலிருந்து யாழ் நோக்கி

# பலத்த ஷெல் தாக்குதல்!

## இரு பெண்கள் பலி; ஐவர் படுகாயம்

நேற்றுப் பகல் 12.45 தொடக்கம் 2.30 மணிவரை பலாலி இராணுவ முகாமிலிருந்து ஈச்சமோட்டை, பாஷையூர், கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளை நோக்கி பத்துக்கும் மேற்பட்ட ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன. இதனால் இருவர் உயிரிழந்ததுடன், ஐவர் படுகாயமடைந்தனர். பல வீடுகளும் சேதமடைந்தன.

ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் உள்ள துரைராஜா என்பவரின் வீட்டில் விழுந்த ஷெல்லினால் அவரது மனைவி திருமதி கோணேஸ்வரி துரைராஜா (55) ஸ்தலத்தில் கொல்லப்பட்டார். இவரின் பிள்ளைகளான இந்துஜா (18), உதயராஜ் (16) ஆகியோர் பலத்த காயமடைந்தனர். இம் மூவரும் மதிய உணவு அருந்திக்கொண்டிருந்தபோதே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

—04 ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம்.

நேற்று முன்தினம் காரைநகரில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் உத்தவர் (தங்கவடிவேல் சந்திரகுமார், வல்வெட்டித்துறை) செல்வம் (முத்தையா சாந்தகுமார், தாழையடி) ஆகியோர் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டனர்.

இவர்களின் புகழுடல் இன்று வடமராட்சியில் உள்ள மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்படும். (71)

## சேலை திருடிய பெண் அகப்பட்டார்

கட்டு கிழக்கு சித்தங்கேணியிலுள்ள தனியார் புடவை விற்பனை நிலையமொன்றில் புடவை வாங்கியபெண்மணி பொருவர் தனது கைப்பை — 04 ஆம் பக்கம் பார்க்க

## பாலியல் வன்முறை; காரணம்: போதை வஸ்து?

இருவன் மீது பெண்கள் மூவர் வன்முறை பிரயோகித்தது தொடர்பாக வந்த செய்திகள் குறித்து முரசொலி விசேட நிருபர் வடமராட்சிக்கு சென்று விசாரணைகள் நடாத்தினார்.

இம்மூன்று பெண்களும் ஆசிரியைகள் அல்லர் என்றும், அவர்கள் க.பொ.த. உயர்தர பரீட்சைக்காக கொழும்பிலிருந்து வந்ததாகவும் பாதிக்கப்பட்ட இருவன் மூன்று வாரங்களாக இப் பெண்களிடம் ரியூஷன் எடுத்து வந்ததாகவும் தெரியவருகிறது.

—04 ஆம் பக்கம் பார்க்க

## மண்டைதீவுக் கடலில் பீரங்கிப் படகு ரோந்து

கடந்த இரு நாள்களாக மண்டைதீவு கடற்பிராந்தியத்தில் கடற்படையினரின் பீரங்கிப் படகு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது யினரால் கைது செய்யப்பட்ட மண்டைதீவைச் சேர்ந்த மீனவர் இருவர் நேற்று முன்தினம் விடுதலை

## இரண்டாம் தவணைக்காக

## குருநகர் மீனவரின் உபகரணங்கள்

இரண்டாம் தவணைக்காக

## பரீட்சை நிலைய பாடசாலைகள் மே 6ல் திறக்கப்படமாட்டா

முதலாம் தவணை விடுமுறைக்காக நேற்று மூடப்பட்ட பாடசாலைகள் அடுத்த மாதம் 6 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகும் என கல்விப் பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

கல்விப் பொதுத் தராதர (உயர்தர) விசேட பரீட்சைகள் நடைபெறும் பாடசாலைகள் திட்டமிட்டபடி மே 6ல் திறக்கப்படமாட்டாது எனவும் இப்பாடசாலைகள் பரீட்சை முடிவடைந்த பின்னரே திறக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் மாவட்டத்துக்கு 21 லட். 94 ஆயி. ரூபா ஒதுக்கீடு

1991 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்திற்கென பாராளுமன்ற உறுப்பினர் க. நவரத்தினம் 21 லட்சத்து 94 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

யாழ் இந்துக் கல்லூரி கட்டட வேலைகளுக்கு 10 லட்ச ரூபாவும் உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலைக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் கலாஜோதி சனசமூக நிலையத்திற்கு ஆறு லட்சமும் கட்டிட வேலைகளுக்காகவும் பாடசாலை அதிபர்க

—04 ஆம் பக்கம் பார்க்க

## க. பொ. த. உயர்தர பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட்டது

கல்விப் பொதுத் தராதர (உயர்தர) விசேட பரீட்சைகளுக்கான 'பரீட்சை அனுமதி அட்டைகள்'' அந்தந்தக் கோட்டங்களுக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்கள் அந்தந்தக் கோட்டக்கல்வி அலுவலகங்களில் தத்தமது பரீட்சை அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இடம்பெயர்ந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் குறிப்பிட்டவர்களின் கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன' (70, 78)

## அரிசி, சீனி, மா வழமையான அளவில் வழங்கப் பணிப்பு

சகலருக்குமான 5 ஆம் கட்ட உலர் உணவு விநியோகத்திற்கு முன்னர் குறிப்பிட்ட அளவுகளில் அரிசி, மா, சீனி ஆகிய பொருள்களை வழங்குமாறு யாழ் செயலகம் சகல ப. நோ. கூ. சங்கங்களுக்கும் அறிவித்துள்ளது.

ஏனைய பொருள்கள் சங்கங்களில் உள்ள இருப்பு நிலைக்கேற்ப வழங்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சகலருக்கும் விநியோகம் செய்யக்கூடிய போதியளவு பொருள்கள் தற்போது சங்

—04 ஆம் பக்கம் பார்க்க

## குருநகர் மீனவரின் உபகரணங்கள் கடற்படையால் பறிக்கப்பட்டன

நேற்று முன்தினம் இரவு கற்கடதீவுப் பகுதியில் வெளியிணைப்பு இயந்திரப் படகுகள் மூலம் றோலர் வலை மூலம் மீன்பிடித்துக்கொண்டிருந்த குருநகரைச் சேர்ந்த சில மீனவர்களின் இயந்திரப் படகிலிருந்து வெளியிணைப்பு இயந்திரங்கள் கடற்படையினரால் பறித்து எடுக்கப்பட்டன.

பின்னர் இவ் இயந்திரங்கள் வேறு மீன்பிடிப் படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களிடம் கடற்படையினரால் சேர்க்கப்பட்டதாக

—04 ஆம் பக்கம் பார்க்க

...தி கடற்படையினரின் பீரங்கிப் படகு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இதே வேளை கடற்படை... சேர்ந்த மீனவர் இருவர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர். (33 ப-12)

## மாவீரன் இளங்கோ குடும்பத்திற்கு நடேஸ்வரா ஆசிரியர்கள் நிதியுதவி

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மாணவனும் அண்மையில் காரைநகரில் மண் மீட்புப் போரில் வீரமரணமடைந்தவருமான வீரவேங்கை சகாதேவன் (இளங்கோ) வின் குடும்பத்தினருக்கு மேற்படி கல்லூரி ஆசிரியர்கள் பணமுடிப்பு வழங்கி கௌரவித்தனர்.

பணமுடிப்பைப் பெற்றுக் கொண்ட பேத்தியாரான வயோதிப் பெண் இது பற்றிக

—04 ஆம் பக்கம் பார்க்க

## கட்டுவன் குப்பிளான் பகுதியில் விமானக் குண்டு வீச்சு!

நேற்று மாலை 5.30 முதல் 6 மணிவரை கட்டுவன் குப்பிளான் பகுதியில் இரு பொம்மர் விமானங்கள் வந்து எட்டு குண்டுகளை வீசின.

இவற்றிலொன்று வெடிக்கவில்லை. ஊரங்குணைப்பகுதியில் மூன்று குண்டுகள் வீழ்ந்தன. குப்பிளான் கற்கரைப் பிள்ளையார் கோயில் அருகாமையில் இரு குண்டுகள் வீழ்ந்தன, ஏனையவை கட்டுவன் பகுதியில் வீழ்ந்தன.

இத்தாக்குதலில் கட்டுவன் ஊரங்குணைப்பகுதியில் இல வீடுகள் சேதமடைந்தன. குப்பிளான் கற்கரைப்பிள்ளையார் ஆலயமும் சேதமடைந்தது. (32 ப 10 48)

## தென்மராட்சியில் குண்டு வீச்சு

நேற்றுக்காலை 10.45 மணியளவில் தென்மராட்சியின் மானாவளைப் பகுதி லாந்து மகா ஆலயத்திற்கருகில் பொம்மர் தாக்குதல் இடம்பெற்றது.

நான்கு குண்டுகளை வீசப்பட்டன. சதாசிவம், இன்னையா ஆகியோரின் வீடுகள் சேதமடைந்தன.

எவரும் காயமடையவோ உயிரிழக்கவோ நேரிடவில்லை.

## முல்லையில் அவ்ரோ குண்டு வீச்சு மூவர் ஸ்தலத்தில் பலி

முல்லைத்தீவில் நேற்றுமுன்தினம் அவ்ரோ விமானம் ஒன்று பரவலாகக் குண்டு வீச்சை நடாத்தியது. மூன்று பொதுமக்கள் பலியாகினர்.

இரவு 7 மணியளவில் இவ் விமானம் புதுக்குடியிருப்பு கேப்பாவலை, இரணைப்பாலை பகுதிகளில் பீப்பாய் குண்டுகளை வீசியது.

இக் குண்டு வீச்சில் இரணைப்பாலையைச் சேர்ந்த

— 04 ஆம் பக்கம் பார்க்க

## சிறியாள் நங்கையைத் தேடும் கீரிப்பிள்ளை

நல்லபாம்பும், கீரிப்பிள்ளையும் சண்டை போடுகின்றன. பாம்பின் விஷம் கீரிப்பிள்ளையின் உடம்பில் பரவுகிறது. உடனே கீரிப்பிள்ளை சிறியாள் நங்கை என்ற மூலிகை இருக்கும் இடத்தைத் தேடிப்போய் அந்த இலையைத் தின்று விஷத்தை முறித்துக்கொள்கிறது. மூலிகை வைத்தியத்தில் சிறந்த பலன்கள் உண்டு என்பதற்கு ஆதாரமாக மேற்படி தகவலைத் தமிழக மருத்துவ இதழ் ஒன்று வெளியிட்டுள்ளது.

## பத்தாயிரம் தமிழ் மாணவருக்குச் சிங்களம் விருப்பு மொழியாகிறது

# சிங்களவருக்கோ தமிழில் நாட்டம் இல்லை

கடந்த வருடம் நடாத்தப்பட்ட கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சையில் பத்தாயிரம் தமிழ் மாணவர்கள் சிங்கள மொழியை இரண்டாவது விருப்பத்திற்குரிய மொழியாக ஏற்றுப் பரீட்சை எழுதியுள்ளதாகப் பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது.

இப் பரீட்சையில் 12,500 சிங்கள மாணவர்கள் மட்டுமே தமிழை இரண்டாவது விருப்புக்குரிய மொழியாக ஏற்றுப் பரீட்சை எழுதியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய சிங்கள மாணவர்களின் தொகையுடன் ஒப்பிடும் பொழுது தமிழ்மொழியை விருப்பத்திற்குரிய மொழியாக ஏற்றுப் பரீட்சை எழுதிய சிங்கள மாணவர்களின் தொகை மிகக்குறைவானதெனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேபரீட்சையில் 81,846 மாணவர்கள் ஆங்கிலத்தை விருப்புக்குரிய மொழியாக ஏற்றுப்பரீட்சை எழுதியுள்ளனர்.

## தமிழக சட்டசபை இ. காங்- 66 அ. தி. மு. க- 168 தொகுதிகளில் போட்டி

தமிழகத்தில் அ. இ. அ. தி. மு. க இந்திரா காங்கிரஸ் கூட்டணி போட்டியிடவுள்ள மக்களவை சட்டசபைத் தொகுதிகள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது

இ. காங்கிரஸ் 28 மக்களவைத் தொகுதிகளிலும், அ.இ.அ.தி.மு.க 11 தொகுதிகளிலும் போட்டியிடும்.

பாண்டிச்சேரியிலுள்ள ஒரே பொது மக்களவைத் தொகுதியிலும் இந்திரா காங்கிரஸ் போட்டியிடும்.

சட்டசபைத் தொகுதிகளைப் பொறுத்தவரை அ. இ. அ. தி. மு. க. தமது தோழமைக் கட்சிகள் சிலவற்றிற்கு ஒதுக்கவுள்ள தொகுதிகள் உட்பட 168 தொகுதிகளிலும் இ காங்கிரஸ் 66 தொகுதிகளிலும் போட்டியிடவுள்ளன.

## புத்தாண்டு கூட்டுப்பிரார்த்தனை

நல்லூர் ஒய்வூதியர் நலன்புரிச் சங்கம் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று காலை 10 மணிக்கு ஓர் கூட்டுப் பிரார்த்தனையையும், இறைவழிபாட்டு வைபவத்தையும் ஒழுங்கு செய்துள்ளது.

இறுதி நிகழ்ச்சியாகத் தாம்பூலம், கைருட்டு முதலியவை முதியோர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## வளைகுடாவிலிருந்து திரும்பியோருக்கு சுயதொழில் முயற்சிக் கடன்

வளைகுடா யுத்தத்தை யடுத்து நாடு திரும்பியோருக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கென விசேட திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் வளைகுடாவிலிருந்து நாடு திரும்பியோர் சுய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கெனக் குறிப்பிட்ட தொகைப் பணம் வழங்கப்படவுள்ளது.

அடுத்த மாதம் முதல் செயற்படுத்தப்படவுள்ள இத் திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டப் பிரிவு, சர்வதேச தொழில் ஸ்தாபனம், 'சீடா' ஆகிய அமைப்புக்கள் நிதியுதவி வழங்கவுள்ளன.

## சாஜன் சுவாமிகள் குருபூசை

திருநெல்வேலி வேதாந்த மடத்தின் சாஜன் சுவாமிகளின் குருபூசை 11 ஆம் திகதி நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இக் குருபூசையில் பண்ணிசைப் புலவர் இராசையா திருஞானசம்பந்தனின் மாணவிகளினால் திருமுறைப்பாடல்கள் பாடப்பட்டன. அன்னதானமும் இடம்பெற்றது.

## வண்ணை அம்பாள் உற்சவம்

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்,

27 ஆம் திகதி காலை இரதோற்சவமும் 28 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

தற்போதைய சூழ்நிலைகள் காரணமாக இரவு உற்சவங்கள் உள் வீதியுடன் நிறைவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (74)

## மீண்டும் உணவு

வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலைக்கும், பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலைக்கும் இம்மாதம் தொடக்கம் யாழ் சுகாதாரத் திணைக்களத்தினால் உணவு ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கப்பட்டதை அடுத்து நோயாளருக்கும், சிற்றூழியர்களுக்கும் சமைத்த உணவு மீண்டும் வழங்கப்பட்டு வருகின்றது. கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இவ்விரு வைத்தியசாலைகளிலும் நோயாளருக்கு சமைத்த உணவு வழங்கப்படாதிருந்தது குறிப்பிடத்தக்கது. (13)

## வர்த்தகர்கள்

## முதலாம் தவணைப்பரீட்சை நடைபெறாமலேயே மன்னார் மாவட்டப் பாடசாலைகள் மூடப்பட்டன

உ

அகில இலங்கைக் கம்பன் கழகம்

அகில இலங்கைக் கம்பன் கழகம்
பத்தாண்டு நிறைவு நிகழ்ச்சித் தொடர்-II

புத்தாண்டுக்

## கவிதைப் பட்டிமண்டபம்

இடம் : கம்பன் கோட்டம், நல்லூர்
காலம் : 14-4-1991 ஞாயிறு மாலை 3-00 மணி
தலைவர் : திரு. க. சிவராமலிங்கம் B. A.

மங்கள இசை

| நாதஸ்வரம் | தவில் |
| --- | --- |
| திரு. N. K. பத்மநாதன் | திரு. N. R. சின்னராசா |
| திரு. S. கேதீஸ்வரன் | திரு. K. R. புண்ணியமூர்த்தி |
| | திரு. T. உதயசங்கர் |

கவிதைப் பட்டிமண்டபம்

பொருள் : "நாமிருக்கும் நாடு நமதென்று அறிந்தோமா?"

நடுவர்: கலாநிதி, வித்துவான் க. ந. வேலன் அவர்கள்

| அறிந்தோம் என | அறியவில்லை என |
| --- | --- |
| கவிஞர்கள் | கவிஞர்கள் |
| காரை செ. சுந்தரம்பிள்ளை | சோ. பத்மநாதன் |
| கல்வயல் வே. குமாரசாமி | ச. வே. பஞ்சாட்சரம் |
| ஜெ. இ. ஜெயசீலன் | நாக. சிவசிதம்பரம் |

04074



உங்களை வரவேற்கக் காத்திருக்கின்றது!

## ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கையில் அமைந்திருக்கின்றது.

சுகாதாரமான சுவையான உணவு வகைகளுக்கும் மற்றும் சிற்றுண்டி ஓடர்களுக்கும் ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

மதிப்பான உணவுப் பார்சல்கள் ரூபா 25/- மட்டுமே.

19/3 கொழும்புத்துறைசாலை, சுண்டிக்குளி.

04020


## முன்மாதிரி

நீண்டகாலமாக சீர்கெட்ட நிலையில் இருந்து வந்த சங்கானைச் சந்தையிலுள்ள பொது மலசல கூடம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சங்கானை பட்டின உப அலுவலகப் பொறுப்பதிகாரி மேற்கொண்ட முயற்சியினால் அப்பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்களின் ஒத்துழைப்புடன் நவீன முறையில் புனரமைப்பு செய்யப்பட்டு மக்கள் பாவனைக்கு அண்மையில் திறந்து விடப்பட்டது. இதனைத் துப்புரவு செய்வதற்கு முழுநேர ஊழியர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். (13)

## அறிஞர்களின் விவரம் சேகரிப்பு

வட்டுக்கோட்டைத் தமிழ்ச் சங்கம் வட்டுக்கோட்டைத் தொகுதியில் வாழ்ந்த புலவர்கள், பண்டிதர்கள், வித்துவான்கள், தமிழ்ப் பேரறிஞர் போன்றோரின் வரலாற்றினை நூலுருவில் கொண்டு வரத் தீர்மானித்துள்ளது.


## சிறு விளம்பரம்

### ஜோதிடம்

(13-4-91) ராகு கேது மாற்றமும், புத்தாண்டுப் பலன்களும் விலை ரூபா 6. எங்கும் விற்பனையாகின்றது ராகு கேது மாற்றத்தின் பின்பும் செவ்வாயின் கெட்ட பார்வையால் யுத்தம் தொடரும். நூல்களுக்கும், ஜோதிட கணிப்புக்களுக்கும், Prof. சத்தியதாஸன், ஞானம்மி, சித்தன்கேணி. 04071

### தேவை

கால், அரை, முக்கால் போத்தல் அளவு திரவம் கொள்ளக் கூடிய, சுத்தமான போத்தல்கள் வாங்கப்படும். மிக்கிவைற். 04063


மன்னார் மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகள் 1 ஆம் தவணைப் பரீட்சை நடைபெறாமலே கடந்த 5 ஆம் திகதி 1ஆம் தவணை விடுமுறைக்காக மூடப்பட்டு விட்டன.

இம் மாத முற்பகுதியில் இங்கு நடைமுறையில் இருந்த ஊரடங்கு உத்தரவு காரணமாகவே பரீட்சைகள் நடைபெறவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

இதே சமயம் கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற 5ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சைகள் இங்கு ஒழுங்காக நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது.

## கல்லூரிகளுக்கு ஆத்மீக யாத்திரை

அனைத்துலக ஆசிரியர் திரு. இ. சங்கரப்பிள்ளை யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கல்லூரிகளுக்கு ஆன்மீக யாத்திரை ஒன்றினை மேற்கொண்டுள்ளார்.

இந்த வகையில் யாழ் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றின் ஆசிரிய மன்றங்களில் இவரது சிறப்புச் சொற்பொழிவுகள் இடம் பெற்றுள்ளன.

தான் ஆக்கிய "போதிப் பிள்ளையார் ஆற்றுப்படை" பற்றியும், போதிப் பிள்ளையார் மகிமை பற்றியும் தன் சொற்பொழிவுகளில் அவர் பிரதானமாகக் குறிப்பிட்டுள்ளார்.

விடுமுறையின் பின் ஏனைய கல்லூரிகளில் இவரது சொற்பொழிவுகள் தொடரவுள்ளன.

நைஜீரியாவின் சர்வதேசக் கல்லூரியில் ஆங்கிலத்துறை முதல்வராக 13 வருடங்கள் பணி புரிந்துள்ள இவர் 67 நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டதும், பல சர்வதேச மன்றங்களில் அங்கம் வகிப்பதும், இவருக்குச் சர்வதேச மன்றத்தினால் 'அனைத்துலக ஆசிரியர்' என்னும் பட்டம் சூட்டப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கவை.

இதேவேளை அண்மைய மன்னார் மாவட்ட இராணுவ நடவடிக்கையின் போது பொதுமக்களின் பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரீ.வி.டெக்குகள் ரேடியோக்கள் மற்றும் விலை உயர்ந்த பல பொருட்கள் இவர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன.

இதேசமயம் தனியாரின் பல லொறிகள், இராணுவத்தினரால் எடுக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

## 20 வருடங்களின் பின் பட்டப்படிப்புக்கு கூடுதலான மாணவர்கள் அனுமதி

கடந்த இருபது வருடங்களுக்குப் பின்னர் முதல் தடவையாக 1990-91 கல்வியாண்டுக்கு கூடுதலான மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதன் மூலம் கூடுதலான மாணவர்கள் கல்வி வாய்ப்பைப் பெறுவது மட்டுமின்றி பட்டதாரியாகும் வாய்ப்பையும் பெறவுள்ளனர்.

மேலதிகமாக அனுமதிக்கப்படும் மாணவர்களுக்கென பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு 10 மில்லியன் ரூபாவினை அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் மேலதிகமாக ஒதுக்கியுள்ளது. (ஐ-11)

## நுணசை முருகன் வருடாந்த உற்சவம்

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவில் வருடாந்த மஹோற்சவம் இம் மாதம் பதினேழாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பத்து நாட்கள் தொடரும் விழா, இருபத்தேழாம் திகதி ரதோற்சவத்தோடும் இருபத்தெட்டாம் திகதி தீர்த்தோற்சவத்தோடும் நிறைவுறவுள்ளது. தற்போதைய நாட்டு நிலையைக் கருத்திற்கொண்டு விழாக்கள் யாவும் உள் வீதியில் நடைபெறுமென ஆலய தர்மகர்த்தா தெரிவித்துள்ளார். (13)


## தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

வாடிக்கையாளர்கள்
அன்பர்கள்
நண்பர்கள்
அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

கைதேர்ந்த தொழிலாளர்களால்
சுகாதார முறைப்படி தயாரிக்கும்

★ சுகிர் லெமன் கிறீம் ★ கொக்கோ கிறீம்
★ மற்றும் கேக் வகைகள் ★ பிஸ்கட்வகைகளுக்கு

நாடவேண்டிய நம்பிக்கை ஸ்தாபனம்.
தமிழீழ உற்பத்திகளுக்கு ஆதரவுதாரீர்.

RAJA BAKE HOUSE
ராஜா பேக் கவுஸ்

மஹாத்மா லேன், ஐடியல் நெல்லியடி.

04075

# வசதிக்கட்டண ஆசிரியர்களுக்கு

# மே மாதம் முதல் நிரந்தர நியமனம்

வசதிகள் சேவைகள் கட்டண ஆசிரியர்களாகக் கடமை புரிபவர்களுக்கு நிரந்தர நியமனம் மே மாதம் முதலாம் திகதி முதல் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறான ஆசிரியர்களின் விவரங்கள் ஏற்கனவே அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு இன்னும் நியமனம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டு வந்தது.

இவர்களின் நியமனத்தால் யாழ் மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறையை ஓரளவு குறைக்க முடியுமெனக் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(32)

## தமிழகத்தில் திரையரங்குகள் மூடப்பட்டன ரஸிகர்கள் பாடு திண்டாட்டம்

தமிழகத்திலுள்ள இரண்டாயிரத்திநாலூறு திரையரங்குகளும் நேற்று முதல் மூடப்பட்டுள்ளன.

திரையரங்குகளை கண்காணிப்பதற்கு திரைப்பட வீடியோ கஸ்தூர்கள் ஒரு தலைப்பட்சமாக கண்காணிப்புக்குழுவொன்றை நியமித்ததை ஆட்சேபித்தே தமிழக திரையரங்கு உரிமையாளர்கள் சங்கம் திரையரங்குகள் அனைத்தையும் காலவரையறையின்றி மூடியுள்ளன.

தமிழ் புதுவருட தினத்தை யொட்டி பல புதிய திரைப்படங்கள் திரையிடப்படவிருந்த வேளை திரையரங்குகள் மூடப்பட்டமை தமிழக ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றத்தையும், ஆத்திரத்தையும் கொடுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நினைவுத் தூபி திறப்பு விழா

வீரவேங்கைகளாகிய கரும்புலி கப்டன் தாடி ஸ்ரீ அண்ணா, மேஜர் சுபாஸ், லெப் கரன்லெப்அல்பேட் ஆகியோரின் நினைவாகத்திருநெல்வேலி ஆடிச்சந்தியில் தூபி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது

இதன் திறப்பு விழா இம்மாதம் பதினாலாம் திகதி பிற்பகல் ஆறுமணிக்கு நடைபெறவுள்ளது.

## பல்கலை அணி வெற்றியீட்டியது

சமீபத்தில் யாழ் பல்கலைக் கழக அணிக்கும், யாழ் சென் றலைட்ஸ் கழக அணிக்கும் இடையில், பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற, இனேகபூர்வ கூடைப்பந்தாட்டப் போட்டியில் பல்கலைக் கழக அணி 20 : 16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியீட்டியது.

ஆரம்பத்தில் வெகு சிறப்பாக ...

## வளைகுடாவில்

# நிரந்தர யுத்த நிறுத்தம்!

இலங்கை நேரப்படி நேற்றுக்காலை 3 30 மணி முதல் வளைகுடாவில் யுத்த நிறுத்தம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

வளைகுடாவில் நிரந்தர யுத்த நிறுத்தத்தை மேற் ... மான வளைகுடாப் போர் முடிவுக்கு வந்துள்ளது.

இதேவேளை 1400 சர்வதேசத் துருப்புக்களை உள்ளடக்கிய சர்வதேசப் பார்வையாளர் குழுவொன்று ஆஸ்திரிய மேஜர் ஜெனரல் ஒருவர் தலைமையில் குவைத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

# கவிதைப் பட்டறை மீதொரு கண்ணோட்டம் - III

— வனமரா

இரண்டாம் நாள் நிகழ்வுகளுக்கு அநு.வை. நாகராஜன் அவர்கள் தலைமை வகித்தார். கலை இலக்கியக் களம் இலக்கியத் துறைக்கு ஆற்றிவரும் பணிகள் குறித்து அவர் விளக்கமாகச் சொன்னார். தொடர்ந்து "எதற்கும் ஒரு வரம்பு இருக்கவேண்டும். அந்த வரம்பு தேவையான இடத்தில் நெகிழ்ந்துகொடுக்க வேண்டும் . . . . என்ற நியதி கவிதைக்கும் பொருந்தும். மரபுக் கவிதை வரம்புக்குள் அடங்குவது. அந்த வரம்பு மீறப்படும்போது அது புதுக் கவிதையாகிறது." என்று கவிதை பற்றிய அறிமுகத்தைச் செய்து அவர் பண்டிதர் க. உமாமகேஸ்வரன் அவர்களை "புதுக் கவிதை ஆக்கம்" பற்றிய விளக்கம் செய்யுமாறு அழைத்தார்.

"இலக்கணச் செங்கோல்,
யாப்புச் சிம்மாசனம்,
எதுகைப் பல்லக்கு,
மோனைத் தேர்கள்,
தனி மொழிச் சேனை,
பண்டித பவனி —
இவை எதுவும் இல்லாத,
கருத்துக்கள் தம்மைத்
தாமே ஆளக்
கற்றுக் கொண்ட,
புதிய மக்களாட்சி
முறையே
புதுக் கவிதை"

என்ற மேத்தாவின் வரைவிலக்கணத்தோடு அவர் தமது உரையை ஆரம்பித்தார்.

"புதுக் கவிதைக்கு ஓர் இலக்கணம் உண்டு. ஆனால் அது மாறலாம்.

கையெழுத்துப் போடட்டும்
கற்றார்கள் அங்கே
வையகத்தின் தலையெழுத்தை
வயல் வெளியில் எழுதுகிறார்

என்ற புதுக் கவிதையில் கையெழுத்தும் வையகமும் ஏன் வருகின்றன? வையகமும் வயல்வெளியும் ஏன் வருகின்றன? எதுகைப்பல்லக்கும் மோனைத் தேர்களும் இல்லை என்று சொல்லியவர்களே அவற்றைச் சிறப்பாக உபயோகிக்கிறார்கள்.

உண்மையில் தமிழில் புதுக்கவிதை ஒரு மீள் கண்டுபிடிப்பே. சங்கப் பாடல்களில் பெரும் பகுதி புதுக்கவிதைகளே. புதுக் கவிதைகளில் ...

இந்த உரைக்குப் பின்னர் மாணவர் குழுக்களாயும் தனியாயும் அமர்ந்து கவிதைகள் புனைந்தனர். குழுக் கவிதைகள் பின்னர் மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் குறை நிறைகள் கூறப்பட்டன, குழு - 6 புனைந்த கவிதை அவற்றுள் சிறந்ததாக மதிப்பிடப்பட்டது; அக் கவிதை இது:—

மரபுக் கவிதை

தலை குனிந்து
நிலம் பார்த்து
அன்ன நடையிலும்
சில சமயம்
துள்ளி நடைபோடும்
யாப்பு
இலக்கணம்
எதுகை, மோனை
ஓசை, நயம்
என்றெல்லாம்
பொன்னாபரணம் பூண்ட
பழமை பேணும்
இனிமை மிகு
பருவப் பெண்.

இரண்டாம் நாள் மாலை நிகழ்வு கவி அரங்குடன் ஆரம்பமாயிற்று. புலவர் ம. பார்வதிநாத சிவம் அவர்கள் அரங்குக்குத் தலைமை தாங்க, பட்டறையில் பங்குகொண்ட பதினைந்துக்கும் மேற்பட்ட இளங் கவிஞர்கள் அரங்கில் பங்குபற்றிச் சிறப்பித்தனர். புதியதோர் உலகம் செய்வோம் என்ற தலைப்பில் அவர்கள் முன் வைத்த புதிய கருத்துக்கள் பல சிந்தனை நிறைக்கச் சபை அடிக்கடி கை தட்டி ஆரவாரம் செய்து தன் மகிழ்வைத் தெரிவித்துக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து சிறந்த கவிதைகளை நடிப்பதற்கான பயிற்சியைப் பட்டறை மாணவர் பெற்றனர்.

மஹாகவியின் தேரும் திங்களும், சோ. ப. வின் பயணம், நாசமாய்ப்போன ஷெல், அற்புத ஓவியம் தீட்டியதார்?, சி சிவசேகரத்தின் புதிய படிமம், முருகையனின் வெறியாட்டிலிருந்து ஒரு பகுதி . . . ஆகியவற்றை அவர்கள் மிகுந்த திறமையுடன் நடித்தது புதியதோர் பரிமாணத்தைக் கொண்டுவந்தாற்போல இருந்தது.

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை ...

செந்நிலையிட்கள் கழக அணியினர் இடைவேளையின் பின் அதிக புள்ளிகள் எடுக்காத நிலையில் தோல்வியை தழுவ வேண்டியதாயிற்று.

இப்போட்டிக்கு நடுவாளர்கள் எஸ். கபிரியல், ஏ. அன்ரன் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினார்கள். (16)

கொண்டிருந்து ஐக்கிய நாடுகள் சபை அறிவித்த கடும் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டதாக ஈராக் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக அறிவித்ததைத் தொடர்ந்தே நிரந்தர யுத்த நிறுத்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் கடந்த ஜனவரி 17 ஆம் திகதி ஆரம்ப

## உதவி ஆணையாளர் ஓய்வு பெற்றார்

முல்லைத்தீவு சமநலசேவை உதவி ஆணையாளர் செல்லையா பஞ்சலிங்கம் ஓய்வு பெற்றுள்ளார்.

1951 ஆம் ஆண்டில் சுகாதாரத் திணைக்களத்தில் தனது பணியை ஆரம்பித்த இவர் புத்தளம் மாவட்ட நீதிமன்றப் பதிவாளராக இருந்து 1979 ஆம் ஆண்டில் சமநல சேவை திணைக்களத்தில் இணைந்து 1987 ஆம் ஆண்டு முதல் முல்லைத்தீவு சமநல சேவை உதவி ஆணையாளராகப் பணி புரிந்தார். (38)

## திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் மீண்டும் பூஜைகள் நிறுத்தம்

மன்னார் மாவட்ட மாந்தைப் பகுதியில் இராணுவ நடவடிக்கையினால் மீண்டும் திருக்கேதீஸ்வர ஆலய பூஜைகள் தடைப்பட்டுள்ளன.

கடந்த வருட இராணுவ நடவடிக்கையினால் தடைப்பட்டிருந்த பூஜைகள் மீண்டும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்தன.

தற்போது மீண்டும் பூஜைகள் நடைபெறாது ஆலயம் மூடப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ப-10)

## இந்திய உப கண்டத்தில்-சிறந்த கப்பல்சேவைவிருது இலங்கைக்கு

இந்திய உபகண்டத்தில் சிறந்த கப்பல் சேவையை மேற்கொண்டமைக்காக 1991 ஆம் ஆண்டுக்கான வெள்ளி விருது இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

லண்டனிலுள்ள சர்வதேச கப்பல் நிறுவனமொன்று இவ்விருதை இரண்டாவது தடவையாகவும் இலங்கைக்கு வழங்கியுள்ளது.

ஐரோப்பாவிலிருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஐந்து கொள்கலன் கப்பல் சேவைகளை இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் இந்திய உபகண்டப் பிராந்தியத்தில் நடாத்தி வருகின்றது.

## கொழும்பில் 4 அகதிமுகாம்களில் 2500 கிழக்கு தமிழ் அகதிகள்

கொழும்பில் அகதிமுகாம்களில் தங்கியுள்ள கிழக்கு மாகாண தமிழ் அகதிகள் தற்பொழுது அங்கிருந்து வெளியேறி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜூன் மாதத்திலிருந்து இவர்கள் கொழும்பிலுள்ள அகதிமுகாம்களில் தங்கியிருந்தனர்.

தற்பொழுது கொழும்பில் நான்கு அகதிமுகாம்கள் மட்டுமே இயங்கி வருகின்றன. இவற்றில் 2500 பேர் தங்கியுள்ளனர்.

பெரும்பாலானவை உருவகங்களில் தங்கியிருப்பவை

"எங்கள் பேனா முனையிற் பிறவாத
சொற்கள்
விக்கிரகம் ஆகாத வெறுங்கற்கள்"
என்பது ஓர் உதாரணம்.

"ஆத்மாவோடு பேசுகிற
அந்தரங்க பாஷை
இசை
காதுகளுக்குப் போர்த்திவிடுகின்ற
கௌரவப் பொன்னாடை
இசை வில்லை வளைத்து
ராக நாணேற்றித்
தொடுக்கப்படும்
பாடல் அம்புகள்
இதய சாம்ராஜ்யங்களை
வெற்றிகொள்கின்றன

என்ற புதுக்கவிதை அப்பர் பெருமானின் 'மனமெனும் தோணி' என்ற முற்று உருவகம்' பொருந்திய தேவாரத்துடன் ஒப்பிடத்தக்கது.

இந்திரனுக்குச்
சாபமாக
உடம்பெல்லாம்
கண்கள் முளைத்தது
எனக்கு வரமாக
உடம்பெல்லாம்
காதுகள்
முளைக்கக் கூடாதா?

என்ற கவிதையில் ஒரு கட்புலப் படிமம் அழகாக விழுகிறது.

ஆகவே புதுக் கவிதையின் செப்பனிட்ட வடிவம் என்பது மரபுக் கவிதை நோக்கிய பயணமாகவே இருக்கிறது" என்று முடித்தார் அவர். அவரது உரை பட்டறை மாணவரைக் கேள்விகள் கேட்பதையும், அவர்களின் அபிப்பிராயங்களை இடையிடை பெறுவதாயும் அமைந்ததையால் மாணவர் உரைகளுடன் நெருங்கிய தொடர்புகொண்டு காணப்பட்டமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அவர்கள் நிகழ்வுகளை மதிப்பிட்டார். கவி அரங்கில் பங்கு பற்றிய மாணவர்களுக்கும் புள்ளி வழங்கினார். கவி அரங்கக் கவிதையை உணர்வுடன் வாசித்த மாணவர்களே அவரைப் பெரிதும் கவர்ந்திருந்தனர். தேரும் திங்களும் கவிதையை ஒரு மாணவி தனித்து நடிப்பதை விட, ஒரு குழுவினர் நடித்தால் சிறப்பாக வரும் என்று அபிப்பிராயப்பட்டார். எழுத்தாளர் திருமதி மாலை பாரதி பட்டறையின் கவர்ச்சி மிகு அம்சங்கள் பற்றி உணர்ச்சிகரமாகச் சில கருத்துக்களை முன் வைத்தார். பட்டறை அவரை மிகக் கவர்ந்திருந்தமை வெள்ளிடைமலை.

செல்வி ஏ. வசந்தரூபியின் நன்றியுரையுடன் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

பட்டறையில் பங்கு பற்றிய எண்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களும் இளங் கவிஞர்களும் மிக மேம்பட்ட நிலையில் ஒழுங்கையும் அமைதியையும் காத்தது பட்டறை வெற்றி பெறுவதற்கான முக்கிய காரணிகளில் ஒன்றாய் இருந்தது.

பட்டறைக்கு வந்த மாணவனுக்கும் பட்டறை முடிந்து வெளியேறிய மாணவனுக்கும் இடையில் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றில் பெருத்த வளர்ச்சி ஏற்பட்டிருந்தமை மிகத் துல்லியமாகத் தெரிந்தது.

ரசிகனைப் போல் நான்
நெருங்கி வருகிறேன்
நீ யேன் ஒரு
விமர்சகன் போல
விலகி நிற்கிறாய்?

என்று கேட்டுக் கொண்டு கவிதை எங்களைப் பற்றிப் பிடித்துக்கொண்ட உணர்வு நீண்ட நாள்களின் பின் மனம் விகசம் இலக்கியக் காற்றைச் சுவாசித்த நிறைவு!

இளங் கவிஞர்களின் பேனாக்களில் இருந்து புறப்பட்டும் புதிய வீச்சுள்ள கவிதைகள்

(முற்றிற்று)

# புதுவருடத்தன்று யுத்த நிறுத்தமா?

## தளபதிகளே தீர்மானிப்பர் என்கிறார் சிறில்

புதுவருட தினத்தன்று வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அரசாங்கம் யுத்தநிறுத்தத்தை மேற்கொள்ளுமா?

நேற்று முன்தினம் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கவிடம் பத்திரிகையாளர் ஒருவர் இக்கேள்வியைக் கேட்டார்.

புதுவருட தினத்தன்று யுத்த நிறுத்தத்தை அனுஷ்டிப்பதா இல்லையா? என்பது என்னைப் பொறுத்ததல்ல, அந்தந்தப்பகுதித் தளபதிகளே அது குறித்து முடிவு செய்வர் என சிறில் ரணதுங்க அதற்குப் பதிலளித்தார்.

## பண்டத்தரிப்பில் கைப்பணிக்காட்சி

பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ நடாத்தும் இலவசத் தையற் பயிற்சி நெறியில் பயிற்சி பெற்ற மாணவிகளின் தையற் பணி மற்றும் கைப்பணிப் பொருள்களின் கண்காட்சி கடந்த 10 ஆம் திகதி புதன் கிழமை தொடக்கம் மூன்று தினங்கள் சிறப்பாகப் பண்டத்தரிப்பில் நடைபெற்றது.

## மாணவர்களும் அதிபர்களும் தமிழர்களே; ஆனால் நிகழ்ச்சிகள் ஆங்கிலத்தில்

திருகோணமலை நகரப் பாடசாலைகளின் பெரும்பாலானவை இவ்வாண்டின் முதலாம் பருவத்திற்கான விளையாட்டுப் போட்டியை நடத்தி முடித்துள்ளன.

இங்குள்ள சில பெரிய பாடசாலைகள் உட்பட பெரும்பாலான பாடசாலைகள் ஆங்கிலமொழியின் மூலமே விளையாட்டுப்போட்டியின் அழைப்பிதழ்கள், சான்றிதழ்கள் என்பனவற்றை அச்சிட்டுள்ளன. என திருமலை பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (38)

# நாளை பிரசோற்பத்தி சித்திரைப் புத்தாண்டு

பிரசோற்பத்தி புதுவருடம் நாளை ஞாயிற்றுக்கிழமை 14. 4 1991 காலை 7 22 மணிக்கு அபரபக்க அமாவாசைத் திதியில், ரேவதி நட்சத்திரம் 2 ஆம் பாதத்தில் மேட லக்கினத்தில் பிறக்கிறது.

அதிகாலை 8. 22 மணி முதல் 11.22 மணிவரை விஷு புண்ணியகாலமாகும். (தவிர்க்க முடியாத சில கருமங்களை இவ்வேளை செய்யலாம்; அமாவாசைத் திதியாயினும் செய்ய வேண்டிய அத்தியாவசிய கருமங்களை மேற் கொள்ளலாம்) இப்புண்ணிய காலத்தில் மங்கலப் பொருள்களைத் தரிசித்து கடவுளைத் தியானித்து மருத்துநீர் தேய்த்து நீராடுதல் மரபு முறைப்படி தயாரிக்கப்பட்ட மருத்து நீரை அநேகமாக ஆலயங்களில் பெறக்கூடியதாக இருக்கும்.) நீராடிய பின் சிவப்பு, வெள்ளை நிறப் புது ஆடையோ அல்லது சிவப்பு, வெள்ளைக் கரையுடைய புது ஆடையோ அணிதல் நலம் இதன் பின்னர் ஆலய வழிபாடு செய்தல், பெரியோர் ஆசீர்வாதம் பெறுதல், விருந்து முதலியவை பண்டு தொட்டுக் கைக்கொள்ளப் பட்டு வரும் வழக்காகும்.

நல்ல மனசுடையோருடைய கையினாலே முதன் முதலாக பணம் உடுதுணி பெறுதல் கை விசேஷம் எனப்படும். இவ்வாறு நல்லோரிடம் முதன் முதல் கை விசேஷம் பெற்றால் அவ்வாண்டு முழுவதும் பணவருவாய், பணப்புழக்கம் என்பன சீராக இருக்குமென்பது நம்பிக்கை

கைவிசேஷம்

சித்திரை 2 ஆம் திகதி (15. 4. 91) திங்கள் பகல் 9. 10 முதல் 9 47 வரை

சித்திரை 2 ஆம் திகதி (15. 4. 91) திங்கள் நண்பகல் 1. 07 முதல் 2. 06 வரை

சித்திரை 4 ஆம் திகதி (17. 4. 91) புதன் காலை 6. 04 முதல் 7 37 வரை

(இவை வாக்கிய பஞ்சாங்கக் கருத்துக்களை ஒட்டிய தகவலாகும்)

## க. பொ. த. (உயர்தர) விசேட பரீட்சை கால அட்டவணை

| திகதி | பாடம் | நேரம் |
|---|---|---|
| ஏப்ரல் 23 | விலங்கியல் i | 8.30 - 10 30 |
| | பிரயோக கணிதம் i<br>சரித்திரம் ii | 8 30 - 11 30 |
| | சரித்திரம் i | 12.30 - 3.30 |
| ஏப்ரல் 24 | பிரயோக கணிதம் ii<br>விலங்கியல் ii<br>இரேக்கரோமதா சாஸ்திரம் i<br>சித்திரம் i | 8.30 - 11.30 |
| | மனைப் பொருளியல் i | 12.30 - 3.30 |

★ வடமாகாண தென்னை பனம் பொருள் கூட். சங். சமாஜம் புகார்

# வங்கியில் வைப்பிலிட்ட பல கோடி ரூபா பணம் மீளப்பெற முடியாத நிலையில் அங்கத்தவர்கள்

வடமாகாணத்தில் பனை வள உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பத்தாயிரத்திற்கு மேலாக தென்னை பனம் பொருள் கூட்டுறவு சங்கங்களின் அங்கத்தவர்களாக பனம் தொழில் வல்லுநர்களும், பணியாளர்களும் 1990 ஆம் ஆண்டு ஆனி மாதம் தொடக்கம் இன்று வரை சங்கங்கள் மூலமாக மக்கள் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட பல கோடி ரூபாவை மீளப் பெற முடியாத அவல நிலையில் மிகுந்த வறுமையின் கீழ் வாழ்கின்றனர்.

தற்போது கூடுதலான உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அங்கத்தவர்கள் தமது வருவாயில் சிறு பகுதியேனும் பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதால் இவ்வாண்டு அவர்களால் செயற்பட்டு வரும் புதிய உற்பத்தித் திட்டங்களாக சீனி, வெல்லம் போன்றவையையும் கைத்தொழில் உற்பத்திகளையும் இந் நிதி இடைக்காமையால் தொடர்ந்து மேற்கொள்ள முடியாத நிலையை இந் நிறுவனங்கள் எதிர்நோக்கும் அபாயம் ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது.

எனவே இந் நிறுவனங்கள் மக்கள் வங்கியில் நடைமுறைக் கணக்குகளையும், சேமக் கணக்குகளையும் பிற்காலத் தேவைக்காக சேமிப்பில் வைத்தும் அவை இன்று எந்த வித பயனையும் வழங்காமை யிட்டு அங்கத்தவர்கள் மிகுந்த விசனமுற்றதுடன், இதற்கு உதவி செய்ய எவரும் முன் வராத நிலையில் வேதனையும் அடைகின்றனர்.

ஆகையால் மக்கள் வங்கி இன்றுவரை சமாசமும், கூட்டுறவுத் திணைக்களமும் மேற்கொண்ட சிபாரிசுகளையும் கவனத்தில் எடுக்காத நிலையை நீக்கி இந்த நிறுவனம் சார்ந்த அங்கத்தவரின் தனிப்பட்ட நன்மையும், இப்பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சியையும் கருத்திற் கொண்டு இந் நிறுவனங்களுக்கு அவற்றின் அவசிய தேவைக்கேற்பவேனும் நிதியை வழங்க நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும் என வடமாகாண தென்னை பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சு கூறுகிறது

# இராணுவத்தினர் வசதி பற்றி அறிவுரை தேவையில்லை

இராணுவத்துக்கு அரசு என்ன செய்ய வேண்டும் என்பதை வேறு யாரும் எமக்கு கூறத் தேவையில்லை என்று பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்த கருத்து ஒன்றை மறுத்து பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கையிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்த முனையில் உள்ள படைகளுக்குப் போதியளவு வசதியளிக்க அரசு தவறிவிட்டது என சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளதாக நேற்று முன்தினம் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது.

இதை மறுத்த பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் கொடைகளும், பட்ஜட்டில் ஒதுக்கப்பட்ட பெரும் தொகை நிதியும் படையினருக்கே வழங்கப்படுகிறது.

சுதந்திரக் கட்சியின் இத் தகைய கூற்றுகள் யுத்தமுனையில் உள்ள படையினரை இழிவுபடுத்துவதாகும் எனவும் அமைச்சு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கை வங்கி கிளைகள்

வன்னிப்பகுதி...

விற்று 48 ரூபாவுக்கு யாம் மாவை வாங்க வேண்டியுள்ளதாக பண்ணையாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். 66)

யாழ் மாவட்ட...

ஞ்சான பயிற்சி நெறிகளுக்கும் இந்த நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதே வேளை ஏனைய துறைகள் உட்பட மொத்தம் ஒரு கோடியே 95 லட்சம் ரூபா இம் மாவட்டத்திற்கு இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் செயலக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. (66)

யாழ்...

பிடிக்கப்பட்டு இது தொடர்பாக சம்பந்தப்பட்ட சங்கங்களின் தலைமைச் செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இத்திணைக்கள அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இந் நடவடிக்கைகள் தொடர்பாக சில பணியாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டும் இடமாற்றம் செய்யப்பட்டுமுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (66)

குருநகர்...

வும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இதனை ஒப்படைத்த அந்த மீனவர்கள் சம்பந்தப்பட்ட மீனவர்களிடம் இருந்து சில்லளவ

முல்லையில்...

வைத்தி (70) அவரது மனைவி இந்திராதேவி (60) யோ. மரியதாஸ் (45) ஆகியோர் பலியாகினர். (71)

சேலை...

யினுள் இன்னொரு சேலையையும் களவாக எடுத்து வைத்துக் கொண்டு செக்கியூரிட்டிகளில் கையும் மெய்யுமாக பிடிபட்டுக் கொண்டார். (ய - 1)

ஜலாலியிலிருந்து...

சச்சமோட்டை வீதானையார் வீதியில் உள்ள எட்வின் அந்தோனிப்பிள்ளை என்பவரின் வீட்டின் மேல் விழுந்த ஷெல்லினால் அவரின் மனைவி திருமதி திரேசம்மா அந்தோனிப்பிள்ளை 58) படுகாயமடைந்து யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார். உணவு பரிமாறிக்கொண்டிருந்த இருவருக்கு முகத்தில் ஏற்பட்ட காயத்தினால் கடுமையான இரத்தப் பெருக்கு உண்டானது. இவ் வீட்டிலிருந்த ஆர்த் மேரியும் (52) காயமடைந்தார். மனுவல்பிள்ளை விக்பிறட் என்பவரின் வீடும் பலத்த சேதமடைந்தது.

புன்னன்குளம் வீதியில் உள்ள

| | | |
|---|---|---|
| | மனைப் பொருளியல் i<br>லத்தீன் i | 12 30 - 3 20 |
| ஏப்ரல் 25 | தூயகணிதம் i<br>பௌத்த நாகரிகம் i | 8.30 - 11.30 |
| | மனைப் பொருளியல் ii<br>லத்தீன் ii | 12 30 - 3 30 |
| ஏப்ரல் 26 | தாவரவியல் i | 8 30 - 10.30 |
| | புத்தசமயம் i<br>தமிழ் i | 8 30 - 11.30 |
| | தூய கணிதம் ii<br>பௌத்த நாகரிகம் ii | 1.30 - 4.30 |
| ஏப்ரல் 27 | தாவரவியல் ii<br>புத்த சமயம் ii<br>தமிழ் ii | 8.30 - 11.30 |
| | சங்கீதம் சிங்களம் i<br>சங்கீதம் கர்நாடகம் i<br>சங்கீதம்மேலைத்தேயம் i | 12 30 - 3.30 |
| ஏப்ரல் 29 | இரசாயனவியல் i | 8 30 - 10 30 |
| | பொருளியல் i<br>மலாய் i<br>பேர்சிய மொழி i<br>ஹிந்தி i | 8 30 - 11 30 |
| | நாட்டியம் சிங்களம் i<br>நாட்டியம் பரதம் i<br>அரபு i<br>ஜப்பான் i | 1 30 - 2.30 |

★ மிகுதிப் பாடங்களுக்கான நேர அட்டவணை பின்னர் வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (70)

**பாலியல் —**

இதுவரை நடைபெற்ற விசாரணைகளிலிருந்து இப் பெண்கள் போதை மருந்துப் பழக்கம் உடையவர்கள் என்றும் குறிப்பிட்ட நாளில் போதைமயக்கத்தில் அவ்வாறு நடந்திருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

**மாவீரன்...**

கருத்துக் தெரிவிக்கும் போது எனது வளர்ப்பு மகனை இழந்த கவலையிலும் பார்க்க அவனை நினைவு கூரும் ஆசிரியர்கள் மாணவர்கள் இருப்பதே நான் உணர்ச்சி வசப்படக் காரணமாகின்றது என்றார். (32)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியங்காடு டச்சு வீதி லக்ஷ்மி பில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 13-04-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# இலங்கை வங்கி கிளைகள் புது வருட கொடுக்கல் வாங்கல்

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளை பிரசோற்பதி தமிழ்ப் புத்தாண்டு வருடப் பிறப்புத் தினத்தையொட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமையன்று பொது மக்கள் வாடிக்கையாளரின் நலன் கருதி கொடுக்கல், வாங்கல் நிகழ்ச்சிக்காக சுப நேரமான முற்பகல் 9 17 முதல் 10 30 மணி வரை திறக்கப்பட்டிருக்கும் என அறிவிக்கப்படுகிறது.

சேமிப்புச்சான்றிதழ்கள் கூடியவட்டி வீதத்தில் வழங்கப்படவுள்ளன இது வருடப் பிறப்பினையொட்டி வழங்கும் விசேட சலுகையாகும்.

இதைவிட அன்றைய தினம் குழந்தைகளுக்கான சேமிப்புக் கணக்குகளும், நிலையான வைப்புக்களும் ஆரம்பிக்கச் சகல வசதிகளும் வாடிக்கையாளர்கட்கு அளிக்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதே போல மானிப்பாய், சுன்னாகம், பருத்தித்துறை, நெல்லியடி இலங்கை வங்கிக் கிளைகளும் 15 ஆம் திகதி காலை9 மணி முதல் 10 மணி வரை திறக்கப்பட்டு சிறுவருக்கான புதுக்கணக்குகள் ஆரம்பித்தல் சேமிப்புச் சான்றிதழ் விற்பனை போன்ற நடவடிக்கைகள் நடைபெறும் எனவும் மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

**கொழும்பிலிருந்தே...**

அதிகுறிகளும் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக வைத்திய சாலை நிர்வாகத்திடம் கேட்ட போது கொழும்பில் இருந்து குப்பை வாளிகள் அனுப்பி வைக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது (74)

**உயிரிழந்தோர...**

ஈடாக 500 பேரும், ஊனமுற்றோர்களில் 120 பேரும் இக் கொடுப்பனவுகளைப் பெற்றிருந்தமை யாழ் செயலகத்திலுள்ள இப்பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள பட்டியலில் இருந்து தெரிய வருகிறது.

இவ்வாறு நட்ட ஈட்டினைப் பெற்றவர்களில் சிலர் தாம் எந்த இடத்திலும் இக்கொடுப்பனவுகளைப் பெறவில்லையென விண்ணப்பப் பத்திரங்களுடன் சத்தியக்கடதாசியையும் இணைந்துள்ளதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (66)

**ஆலயத்தில்...**

தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இவர்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகி இருப்பதாகவும் பட்டுச் சேவையை நடாத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது (78)

**அரிசி...**

கடைகளின் இருப்பில் இல்லாதபடியால் முதலில் இடம்பெயர்ந்தோருக்கான 'இ' அட்டைக்கும் மற்றும் கஷ்ட நிலைக்குள்ளாகியிருக்கும் கிராமங்களில் உள்ள மக்களுக்கும் இவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (66)

டம் இருந்து சித்தளவு ணத்தை பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

**பரீட்சை...**

மூடப்பட்டிருக்கும் பாடசாலை நாள்களை ஈடு செய்யும் வகையில் இம் பாடசாலைகளில் சனிக்கிழமையும் வகுப்புகள் நடத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கல்விப் பொதுத் தராதர (உயர்தர) விசேட பரீட்சைகள் நடைபெறாத பாடசாலைகள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் ஆரம்பிக்க விரும்பின் கல்வித் திணைக்களம் அதற்கு ஆதரவாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (70)

புங்கன்குளம் வீதியில் உள்ள சுப்பையா பொன்னம்பலம் என்பவரின் வீடும், அரியாலை கிருஷ்ணபிள்ளை லேனில் உள்ள கார்த்திகேசு தரும குலசிங்கம் என்பவரின் வீடும், கொழும்புத்துறை வளன்புரம் பகுதியில் மைக்கல் நவரட்ண ராஜா, எம் தில்லைநாதன் திருமதி மனோரஞ்சி கந்தையா, திருமதி குலசிங்கம் ஆகியோரின் வீடுகள் சேதமடைந்தன.

பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் தேவாலயமும் இத் தாக்குதலால் சேதமடைந்துள்ளது சில ஷெல்கள் பாஷையூர் கடலில் விழுந்து வெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (16, 33, 47, ப11)

## காலமானார்

## வேலுப்பிள்ளை சிதம்பரம்

காரைநகர் களபூமியைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவி சிதம்பரம் சிவபதமடைந்து விட்டார், அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு சங்கரப்பிள்ளையின் சிரேஷ்ட புதல்வியும், கதிர்காமம் இராமகிருஷ்ணன், மிசனில் கடமையாற்றிய சபாரத்தினம், மங்கையர்க்கரசி (இங்கிலாந்து). தனலட்சுமி, காலஞ்சென்ற துரைசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், வைத்திய கலாநிதி க. சற்குரு (இங்கிலாந்து), க. விஸ்வலிங்கம், (இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர்), மீனாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயசீலன் (இங்கிலாந்து), சண்முகநாதன் (இங்கிலாந்து), ஆகியோரின் அன்பு பாட்டியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் 374 நாவலர் வீதியில் ஈமக்கிரியைகள் நடைபெற்று கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

374, நாவலர் வீதி. க. விஸ்வலிங்கம்,
யாழ்ப்பாணம்.